**இராசிபுரம் நகராட்சி தனி அலுவலர் அவர்களால் 13.05.2021—ஆம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு சாதாரணக் கூட்டத்தில் நடைபெற உள்ள கூட்ட நடவடிக்கைகள்.**

இராசிபுரம் நகராட்சி, தனி அலுவலர்,
நாள் : **11.05.2021** இராசிபுரம் நகராட்சி

**<u>பொருள்கள்</u>**

(1) இராசிபுரம் நகராட்சி வார்டு—ஏ, பிளாக்—2, நகரளவை எண். 13எ, 5பி, 6எ, 6சி மற்றும் 9பி, 0.80 ஏக்கர் பரப்பளவில் குடியிருப்பு அனுமதி கோரி மனுதாரர் (1) திரு துரைசாமி, (2) பி. நடராஜன் சமர்ப்பித்துள்ள விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் அவர்களின் கடிதம் ந.க.எண். 691/2020 நா.மா. நாள் 05.11.2020—இல் சாலைகளை உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்தும், TANGEDCO மற்றும் பொது ஒதுக்கீடு சாலையமைப்பு வரைபடத்துடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு அடிப்படை வசதிகளான தார்சாலை வசதிகள், குடிநீர் குழாய் வசதிகள், சாக்கடை வசதிகள், மின் கம்பம் வசதிகள் மற்றும் தெரு விளக்கு அமைக்கப்பட்டுள்ளது என நகராட்சி பொறியாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பொது உபயோகம் 200 சதுரடியும் சாலைகள் 13582.07 சதுரடியும் ஆவண எண். 1289/2021 மூலமாக இராசிபுரம் சப் ரிஜிஸ்டர் அலுவலகத்தில் தான பத்திரம் மூலமாக பதிவு செய்து ஒப்படைத்துள்ளார். எனவே, மேற்படி மனைப்பிரிவு சாலைகள் மற்றும் பொது உபயோக ஒதுக்கீட்டினை ஏற்பது குறித்து மன்றப் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(4737/20/எப்1)

**தீர்மானம் எண். 1003**

அனுமதிக்கப்பட்டது.

(2) அரசாணை நிலை எண். 92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 3.7.2007—இன்படி நகராட்சியில் குத்தகைக்கு விடப்பட்டு 9 ஆண்டுகள் முடிவடைந்த அசையா சொத்துகளுக்கு அப்போதைய அங்காடி மதிப்பீட்டின் அடிப்படையில் வாடகை மறு நிர்ணயம் செய்ய நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களை தலைவராகக் கொண்ட கண்காணிப்புக் குழுவின் மூலம் உயர்வு செய்யப்பட்ட வாடகைக்கு ந.க.எண். 4162/2016/அ4 நாள் 4.2.2021 —இல் நடைபெற்ற குழுக் கூட்டத்தில் ஒப்புதல் வழங்கியுள்ளது. குத்தகைதாரருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டதில் புதுப்பித்தல் கட்டணம், ஒரு வருட வைப்புத் தொகை செலுத்தி மாத வாடகைக்கு சம்மதக் கடிதத்தில் தெரிவித்துள்ளனர். மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | இனம் | தற்போது வசூலிக்கப்பட்ட வாடகை | அங்காடி மதிப்பீட்டின்படி மறு நிர்ணயம் செய்யப்பட்ட மாத வாடகை |
|---|---|---|---|
| 1 | புதிய பேருந்து நிலைய காலியிட கடை | ரூ. 751/— | ரூ. 2500/— |

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(4574/20/அ2)

**தீர்மானம் எண். 1004**

அனுமதிக்கப்பட்டது.

(3) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் ஆட்டோ (LCV) வாகனம் TN 28 BW 9642–ற்கு தகுதிச்சான்று மற்றும் இதர பழுதுகள் நீக்கும் பணிக்கு கடந்த 23.2.2021 அன்று இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அவற்றின் விவரம் பின்வருமாறு.

| **வ. எண்.** | **பணியின் விவரம்** | **லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், மேட்டூர் (ரூ.)** | **ஸ்ரீ ஜோதி முருகன் மோட்டார் ஒர்க்ஸ், சேலம் (ரூ.)** |
|---|---|---|---|
| 1) | வாட்டர் சர்வீஸ் | 9600/– | 10500/– |
| 2) | வர்ணம் பூசுதல், ஸ்டிக்கர் ஒட்டுதல் | 10500/– | 11600/– |
| 3) | 4 வீல் கிரிஸ் மாற்றுதல் | 19300/– | 20900/– |
| 4) | கியர் பாக்ஸ் ஆயில் மாற்றுதல் | 6000/– | 7100/– |
| 5) | கிரேன் ஆயில் மாற்றுதல் | 49600/– | 51600/– |
| 6) | கிளர்ச் பிளேட் லோடிங் மாற்றுதல் | 12600/– | 13000/– |
| 7) | வேகக் கட்டுப்பாட்டுக் கருவி பொருத்துதல் | 19600/– | 20100/– |
| 8) | ஒலிபெருக்கி புதியது மாற்றுதல் | 2300/– | 2400/– |
| | **மொத்தம் :** | **129500/–** | **137200/–** |

வ.எண். 1–இல் குறிப்பிட்டுள்ள நிறுவனத்தினர் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளதால், லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், மேட்டூர் என்ற நிறுவனத்தினரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினங்களை நகராட்சி வருவாய் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3) சட்டமன்ற தேர்தல் 2021 முன்னிட்டும், அவசர அவசியங் கருதியும், நகர்மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி, தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று, பணியாணையும், பட்டியல் தொகையும் வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(149/21/எச்1)

**தீர்மானம் எண். 1005**

அனுமதிக்கப்பட்டது.

(4) இராசிபுரம் நகராட்சிப் பகுதிகளில் கொரோனா வைரஸ் (கோவிட்–19) நோய் நகர பொது மக்களுக்கு பரவாமல் தடுக்கும் பணிகளுக்கு கிருமிநாசினிகள் லைசால், நீர்த்த சுண்ணாம்புத்தூள், பிளிச்சிங் பவுடர், ஆசிட், வெள்ளை பினாயில் (வாசைன) மற்றும் பாதுகாப்பு உபகரணங்களான 3 லேயர் முககவசம், PPE Kit ஆகியவை இருப்பில் இல்லாத காரணத்தினால், மேற்கண்ட கிருமிநாசினிகள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்களை வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ. 6.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) தற்சமயம் கொரோனா நோய் அதிகளவில் பரவி வருவதாலும், அவசர அவசியங் கருதி, நகர்மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி, தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேற்கண்ட கிருமிநாசினிகள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்களை வாங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(2028/21/எச்1)

**தீர்மானம் எண். 1006**

அனுமதிக்கப்பட்டது.

(5) வழக்கு எண். W.A. SR.No. 70171 / 2014 திரு எம். பழனிசாமி மற்றும் 12 துப்புரவு பணியாளர்களின் வழக்கில் உயர்நீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்ய (Restoration petition) வழக்கறிஞர் திரு எஸ்.வி. துரை சோலைமலை அவர்களுக்கு வழக்காடு கட்டணம் ரூ. 15000/– வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) அவசர அவசியங் கருதி, நகர்மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி, தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று, வழக்கறிஞருக்கு வழக்காடு கட்டணம் ரூ. 15000/– வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(1107/13/எச்1)

**தீர்மானம் எண். 1007**

அனுமதிக்கப்பட்டது.

(6) இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான ஈப்பு வாகனம் TN 28 AT 4555–இல் ஏற்பட்டுள்ள பழுதுகள் சரிசெய்ய ரூ. 54950/–க்கான விலைப்புள்ளி வாகனம் பெறப்பட்ட விநியோக நிறுவனமான SKS ஆட்டோமொபைல்ஸ், சேலம் ரோடு, நாமக்கல் நிறுவனத்திடமிருந்து வரப்பெற்றுள்ளது. ஈப்பு வாகனத்தின் பழுதுகள் சரிசெய்ய ரூ. 54950/– செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது. பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்ற அலுவலரின் முன் அனுமதி பெற்று பணியாணை மற்றும் செலவுத் தொகை வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்ற அலுவலரின் முன் அனுமதி பெற்று பணியாணை மற்றும் செலவுத் தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(1390/21/இ2)

**தீர்மானம் எண். 1008**

அனுமதிக்கப்பட்டது.

(7) இராசிபுரம் நகராட்சிப் பகுதியில் அரசாணை நிலை எண். 97, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 12.07.2007 மற்றும் சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 748/2008/கு.வ.2 நாள் 21.09.2009–இன்படி புதிதாக குடிநீர் இணைப்பு பெறுபவர்களிடமிருந்து ஒவ்வொரு ஆண்டும் நகராட்சிக்குச் செலுத்த வேண்டிய சாலை பராமரிப்புக் கட்டணம் முந்தைய ஆண்டின் தொகையிலிருந்து 5% உயர்த்தி வசூல் செய்யப்பட வேண்டுமென்று ஆணையிடப்பட்டுள்ளதால் குடிநீர் இணைப்பு வழங்கும்போது சாலை பராமரிப்புக் கட்டணம் கீழ்கண்டவாறு 5% 1.4.2021 முதல் உயர்த்தி வசூல் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

| வ. எண். | சாலை விவரம் | 1.4.2020 முதல் வசூலிக்கப்படும் கட்டணம் | 1.4.2021 முதல் வசூலிக்கப்பட வேண்டிய கட்டணம் |
|---|---|---|---|
| 1 | கருங்கல் ஜல்லி சாலை<br>0.30 மீட்டர் நீளத்திற்கு<br>0.30 முதல் 0.90 மீட்டர் நீளத்திற்கு | <br>ரூ. 1803.00<br>ரூ. 2992.00 | <br>ரூ. 1894.00<br>ரூ. 3069.00 |
| 2 | தார் சாலை<br>0.30 மீட்டர் நீளத்திற்கு<br>0.30 முதல் 0.90 மீட்டர் நீளத்திற்கு | <br>ரூ. 3859.00<br>ரூ. 4890.00 | <br>ரூ. 4052.00<br>ரூ. 5135.00 |
| 3 | சிமெண்ட் சாலை<br>0.30 மீட்டர் நீளத்திற்கு<br>0.30 முதல் 0.90 மீட்டர் நீளத்திற்கு | <br>ரூ. 4454.00<br>ரூ. 5490.00 | <br>ரூ. 4677.00<br>ரூ. 5765.00 |

**அலுவலகக் குறிப்பு :** அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று 1.4.2021 முதல் சாலை பராமரிப்புக் கட்டணம் 5% உயர்வு செய்து வசூல் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

(1735/21/இ2)

**தீர்மானம் எண். 1009**

அனுமதிக்கப்பட்டது.

(8) இராசிபுரம் நகராட்சி வார்டு எண். 10, வி. நகர் ரோடு எண். 18 மற்றும் வி. நகர் ரோடு எண். 14–இல் உள்ள பகிர்மானக் குழாய் நீட்டிப்பு செய்து மற்றும் வார்டு எண். 25, 26, செக்காரத் தெருவிற்கு அருணை நகர் பகுதி வழியாக செல்லும் பகிர்மான குழாயுடன் இணைத்து சீரான முறையில் குடிநீர் வழங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ. 1.00 இலட்சம் குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இப்பணியின் செலவினத்தை குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(2040/21/இ2)

**தீர்மானம் எண். 1010**

அனுமதிக்கப்பட்டது.

(9) இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான தெரு விளக்குகளில் உயர் மின் விளக்குகளை பராமரிக்க ஏணி பொருத்தப்பட்டுள்ள ஈப்பு எண். TN 28 Z 7035–இல் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்ய விலைப்புள்ளி கோரியதில் ரூ. 225000/–ற்கு விலைப்புள்ளி அளித்துள்ளனர். எனவே, ஈப்பு எண். TN 28 Z 7035–இல் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ. 225000/– மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :** அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) இப்பணியின் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(2186/21/இ2)

**தீர்மானம் எண். 1011**

அனுமதிக்கப்பட்டது.

( 10 ) இராசிபுரம் நகராட்சியில் 13 வார்டுகளிலுள்ள தெரு விளக்குகள் (1) 40 வாட்ஸ் குழல் விளக்குகள்– 526 (2) சி.எப்.எல். 36 வாட்ஸ் – 484 (3) சோடியம் ஆவி விளக்குகள் – 67 மொத்தம் – 1077 மின் விளக்குகளை பராமரிக்க, இந்நகராட்சி மன்றத் தீர்மானம் எண். 926, நாள் 31.12.2020–இன்படி 16.06.2021 வரை ஸ்ரீ குமரன் எலக்ட்ரிக்கல்ஸ், சேலம் நிறுவனத்திற்கு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

தற்போது பணியின் அவசியம் கருதியும், தேர்தல் நடத்தை விதிகள் நடைமுறையில் இருந்ததாலும், கொரோனா இரண்டாம் அலை நாடு முழுவதும் மிக தீவிரமாக உள்ள நிலையில் நகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லாததாலும், தனியார் தெரு விளக்கு பராமரிப்பு காலத்தினை, மேலும் ஆறு மாத காலத்திற்கு 17.06.2021 முதல் 16.12.2021 வரை நீட்டிப்பு செய்து வழங்கவும், ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் விலை விகிதத்தின் அடிப்படையிலேயே தொகை வழங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ. 500000/– (ரூபாய் ஐந்து இலட்சம்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. பணியின் அவசியம் கருதி பராமரிப்பு கால நீட்டிப்பு அனுமதி வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அ) பணியின் அத்தியாவசியத்தினைக் கருதி 13 வார்டுகள் தெரு விளக்குகள் பராமரிக்க ஸ்ரீ குமரன் எலக்ட்ரிக்கல்ஸ், சேலம் நிறுவனத்திற்கு 17.06.2021 முதல் 16.12.2021 வரை மேலும் ஆறு மாத காலம் நீட்டிப்பு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(1207/19/இ1)

**தீர்மானம் எண். 1012**

அனுமதிக்கப்பட்டது.

( 11 ) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்கு தேவைப்படும் முககவசம், ஆசிட், பினாயில், நீர்த்த சுண்ணாம்புத்தூள் மற்றும் PPE Kid விநியோகம் செய்யும் பணிக்கு கடந்த 28.04.2021 அன்று இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | முக கவசம் (3 layer) ஒன்றின் விலை | ஆசிட் ஒரு லிட்டரின் விலை | வெள்ளை பினாயில் (வாசனை) ஒரு லிட்டர் விலை | நீர்த்த சுண்ணாம்புத் தூள் ஒரு கிலோ விலை | பிளிச்சிங் பவுடர் ஒரு கிலோ விலை | PPE Kid ஒன்றின் விலை |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேஷன், நாமக்கல் | ரூ. 6.09 | 53.10 | 56.64 | 12.18 | 49.56 | 380.80 |
| 2 | ஸ்ரீ அத்தனூர் அம்மன் டிரேடர்ஸ், காளப்பநாயக்கன்பட்டி | ரூ. 7.00 | 55.00 | 60.00 | 13.00 | 56.00 | 390.00 |

வ.எண். 1–இல் குறிப்பிட்டுள்ள நிறுவனத்தினர் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளதால், ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேஷன், நாமக்கல் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்காணும் செலவினங்களை நகராட்சி வருவாய் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

3) சட்டமன்ற தேர்தலை முன்னிட்டும், அவசர அவசியங் கருதியும், நகர்மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி, தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று, விநியோக ஆணையும், தொகையும் வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(2028/21/எச்1)

**தீர்மானம் எண். 1013**

அனுமதிக்கப்பட்டது.

(12) இராசிபுரம் நகராட்சியின் 2020–21–ஆம் ஆண்டின் திருத்திய வரவு செலவு மற்றும் 2021–22–ஆம் ஆண்டிற்கான உத்தேச வரவு செலவுத் திட்ட அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(பி1/1765/21)

**தீர்மானம் எண். 1014**

அனுமதிக்கப்பட்டது.

ஒம் /– சு. பிரபாகரன்,
தனி அலுவலர்.

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
இராசிபுரம் நகராட்சி.